

# தேசிய கல்வி நிறுவகம், மகரகம

## ஆராய்ச்சி முறைகள் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி - 2024

தேசிய கல்வி நிறுவக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித்துறையினரால் திட்டமிடப்பட்டுள்ள மேற்படி கற்கை நெறிக்காக விண்ணப்பம் கோரப்படுகிறது. கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியில் நாட்டமுள்ளோரை இக்கற்கை நெறி இலக்காகக் கொண்டுள்ளது. கற்கைநெறி ஐந்து கிரடிற்றுக்களை (05 credits) கொண்டுள்ளது. நேர்முக செய்முறை அமர்வுகள் மூலம் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடாத்தப்படும்.

**கற்கை நெறி உள்ளடக்கம்**

- ஆராய்ச்சி முன்மொழிவு தயாரித்தல்
- இலக்கிய உசாவுகை நடத்துதல்
- ஆராய்ச்சி வடிவமைப்பைத் தெரிவு செய்தல்
- தரவு சேகரித்தல்
- தரவுப் பகுப்பாய்வு
- விஞ்ஞானபூர்வமாக ஆராய்ச்சி அறிக்கை எழுதுதல்

**கால வரையறை:** ஆறு (06) மாதங்கள் (மாதம் ஒன்றுக்கு இரண்டு வார இறுதிகள்)

**கட்டணம்**

| | |
|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | : ரூ: 200.00 |
| பதிவுக் கட்டணம் | : ரூ: 1000.00 |
| மொத்த கற்கை நெறிக் கட்டணம் | : ரூ: 30,000.00<br>(சமமான மூன்று தவணைகளில் செலுத்தலாம்) |

**<u>விசாரணைகள்</u>**

பணிப்பாளர் (ஆராய்ச்சி): 0117-601790

| | |
|---|---|
| இணைப்பாளர் | : சிங்கள மொழி மூலம்- செல்வி- எம். டீ. டீ. ஐராணி த சில்வா |
| மின்னஞ்சல் | : iraniemdd@gmail.com தொலைபேசி: 0117601683/0715196894 |
| இணைப்பாளர் | : தமிழ் மொழி மூலம்- திருமதி வி. அகல்யா |
| மின்னஞ்சல் | : agalyavino@gmail.com தொலைபேசி: 0117601794/0773144962 |

**1.0 விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பிக்க தேசிய கல்வி நிறுவக பரீட்சைகள் துறையினது உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பிரவேசித்து, https://www.exams.nie.lk/intakes/new எனும் இணைப்பின் வழியே, நிகழ்நிலையில் (Online) மாத்திரம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். நிகழ்நிலையில் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைப்பின் வழியே பெறலாம். https://www.exams.nie.lk/info/applying-for-new-entrollments.

**விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்ய வேண்டிய விதம்**

https://www.exams.nie.lk/intakes/new வலைத்தளத்தில் பிரவேசித்து (Sign up) உரிய தகவல்களை இட்டுப் பூர்த்தி செய்க. Sign up தொடர்பான தேவையான அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைப்பு மூலம் பெறலாம். https://www.exams.nie.lk/info/register-as-a-user.

பயனர் இலக்கத்தினைக் (user ID) குறிப்பிடுங்கள். ஏதிர்வரும் நடவடிக்கைகளுக்காக, கடவுச்சொல்லை (Password) நினைவில் வைத்திருங்கள்.

2.0 வலைத்தளத்தின் வலதுபக்க மேற்புறத்தில் உள்ள இரண்டு கட்டங்களிலும் பயனர் இலக்கத்தையும், கடவுச்சொல்லையும் இட்டு பிரவேசியுங்கள் (login)

2.1 உங்களைப் பற்றிய தகவல் பத்திரத்தை (User Profile) இற்றைப்படுத்துங்கள் (update)

- தனிப்பட்ட தகவல்கள்
- சேவை தொடர்பான தகவல்கள்
- கல்வித் தகைமைகளும் தொழில் தகைமைகளும்

2.2 பின்னர், exams.nie.lk/new intake **Certificate Course in Research Methodology** கற்கை நெறிக்குச்சென்று my application ஐ தெரிவு செய்து, தகவல்களைச் சரியாக உட்படுத்தி, அதனை மீள்பரிசீலித்து விண்ணப்பத்தை அனுப்புங்கள். (தேவையான அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைப்பு மூலம் பெறலாம்). Exams.nie.lk/info/applying-for-new-enrollments.

2.3 உங்களுக்குக் கிடைக்கும் பயனர் தொடர்பு இலக்கத்தை (Application Reference Number) நினைவில் வைத்திருங்கள்.

**விண்ணப்பப்பத்திரத்தைத் தரவிறக்கம் செய்தல்**

நிகழ்நிலையில் (online) விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்த பின்னர், உங்களது தொடர்பு இலக்கத்துடன் (reference number) கிடைக்கும் விபரங்களடங்கிய பிரதியை அச்சிட்டு, தங்களது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தி, பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை மூலப் பிரதியுடன் 2024 மார்ச் பதினைந்தாம் திகதியன்று (2024.03.15) அல்லது அதற்கு முன்பாக பணிப்பாளர், **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம,** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி முறைகள் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி-2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

- நிகழ்நிலை (online) முறையில் கட்டணம் செலுத்தும்போது கிடைக்கும் பற்றுச்சீட்டின் அல்லது வங்கிக்கிளையொன்றில் கட்டணம் செலுத்தும்போது கிடைக்கும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைப்பது கட்டாயமாகும்.
- தொழில்நுட்ப உதவி தேவைப்படுமிடத்து 011 760 1777/011 760 1776 இலக்கங்களுடன் வாரநாட்களில் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம